# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப. (ஓ).

***********

முறையீட்டு மனு எண்.031/2018/பே
ஆணை நாள்: 21–12–2018.

திரு சுனில் ஜெயராம்,
எண். 7, 2வது பிரதான சாலை,
எஸ்.பி.ஐ. காலனி,
சிட்லபாக்கம்,
சென்னை–64. -- முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
சிட்லபாக்கம் பேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம். -- எதிர் மனுதாரர்.

ஆணை.

காஞ்சிபுரம் மாவட்டம், சிட்லபாக்கம், எண்.7, இரண்டாவது மெயின் ரோடு, SBI காலனி பகுதியினை சேர்ந்த திரு. சுனில் ஜெபராம், என்பவரது 17.02.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.02.2018 ல் பெறப்பட்டு, மேற்படி முறையீட்டு மனுவிற்கு முறையீட்டு மனு எண்.031/2018 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீது அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் உரிய முறையில் பரிசீலிக்கப்பட்டும் கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

காஞ்சிபுரம் மாவட்டம், சிட்லபாக்கம் பேரூராட்சியில் வியாபார நோக்கில் செயல்படும் சில உணவகங்களில், குறிப்பாக நரசிம்ம பல்லவர் தெருவில் இயங்கும் உணவகத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீர், மழை நீர் வாய்க்காலில் கலந்து வழிந்தோடுவதால், அதன் அருகில் உள்ள ஏரியில் உள்ள நீர் மாசுபடும் நிலை ஏற்படுவதாகவும், இது குறித்து சிட்லபாக்கம் பேரூராட்சியில் முறையிட்டும், தமிழ்நாடு முதலமைச்சரின் தனிப்பிரிவில் மனு அளித்தும் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவித்து தனது முறையீட்டு மனுவினை விசாரணை கோரி இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 23.02.2018 நாளிட்ட அறிவிப்பாணையினைத் தொடர்ந்து, சிட்லபாக்கம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 21.05.2018 நாளிட்ட கடிதம் மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை கீழ்க்கண்டவாறு இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம், சிட்லபாக்கம் பேரூராட்சிக்குட்பட்ட ஜி.கே உணவு தயாரிக்கும் நிறுவன சமையல் கழிவுகளை மழைநீர் கால்வாயில் விடுவதாக பெறப்பட்ட முதலமைச்சரின் தனிப்பிரிவு மனு எண்.932869/நாள்.28.12.2017ஐ தொடர்ந்து, சம்பந்தப்பட்ட உணவுக்கூட உரிமையாளருக்கு, சிட்லபாக்கம் பேரூராட்சி அறிவிப்பு கடித ந.க.எண். 95/2017/அ.1/நாள்.17.01.02018 ன்படி வழங்கப்பட்டு உரிய விளக்கம் பெறப்பட்டு, சிட்லபாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, மேற்படி மனுவிற்கான விளக்க அறிக்கை சிட்லபாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரின் கடித ந.க.எண்.95/2017 ன் மூலம் சமர்ப்பிக்கப்பட்டு மேற்படி முதலமைச்சரின் தனிப்பிரிவு மனு நீக்கம் செய்யப்பட்டதாகவும், மேற்படி புகார் உணவக உரிமையாளருக்கும், முறையீட்டு மனுதாரருக்கும் கருத்து வேறுபாடுகள் காரணமாக வேண்டுமென்றே புகார் எழுதப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 31.05.2018 நாளிட்ட அழைப்பாணையின்படி இம்முறைமன்ற நடுவத்தில் 11.07.2018ல் ஆஜரான முறையீட்டு மனுதாரர் தனது வாக்குமூலத்தில், மேற்படி முறையீடு குறித்து பேரூராட்சிகளின் இயக்குநர், பேரூராட்சி செயல் அலுவலர் போன்ற அனைத்து அலுவலர்களுக்கும் புகார் மனு அனுப்பப்பட்டும், புகாரில் குறிப்பிட்ட விவரம் சரி செய்யப்படாமலே, சரி செய்யப்பட்டதாக உண்மைக்கு புறம்பான தகவல்களை தருவதாகவும், மழைநீருக்காக கட்டப்பட்ட கால்வாய், ஜி.கே.உணவகம் மற்றும் பல வீடுகளை சேர்ந்த கழிவு நீர் அனைத்தும் கட்டுப்பாடின்றி மழைநீர் கால்வாயில் நேரடியாக கலக்கப்பட்டு, சிட்லபாக்கம் ஏரியிலும், செம்பாக்கம் ஏரியிலும் கலந்து ஏரி சாக்கடையாக மாறி வருவதாகவும், இது குறித்து தான் பல புகார்கள் அனுப்பியும் பேரூராட்சி செயல் அலுவலர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார். பாதாள சாக்கடை திட்டம் நிறைவேற்ற சில காலமாகும் என்பதால் திறந்த நிலையில் உள்ள சாக்கடையினை குறைந்தபட்சம் மூடியாவது சுகாதார பிரச்சினை ஏற்படாமல் தடுக்கப்படவேண்டும் எனவும் இது குறித்து தனது எழுத்து பூர்வமான கடிதம் மற்றும் புகைப்படங்களையும் சமர்ப்பித்துள்ளார்.

15.11.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில் முறையீட்டு மனுதாரரின் 11.07.2018 நாளிட்ட வாக்குமூலம் மற்றும் சில கோரிக்கைகள் அடங்கிய கடிதத்தினை சிட்லபாக்கம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு அனுப்பி வைக்கப்பட்டு இது குறித்தான விரிவான அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனுதாரரின் 11.07.2018 நாளிட்ட கூடுதல் கோரிக்கைகள், மற்றும் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள பொருட்கள் தொடர்பான விளக்கங்களை சமர்ப்பிக்குமாறு சிட்லபாக்கம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவ 19.11.2018 நாளிட்ட அழைப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

19.12.2018 நாளிட்ட சிட்லபாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையில் மேற்படி முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள புகார்கள் தொடர்பாக கீழ்க்கண்டவாறான விளக்கங்களை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சிட்லபாக்கம் பேரூராட்சிக்குட்பட்ட நரசிம்ம பல்லவன் தெருவில் அமைந்துள்ள ஜி.கே.உணவகம் மூலம் வெளியேறும் கழிவு நீர் அவர்களின் சொந்த இடத்திலேயே சேகரம் செய்து தனியார் கழிவு நீர் லாரிகள் மூலம் பெருங்குடிக்கு எடுத்துச் செல்லப்படுவதாகவும், மேலும் அதனைச் சுற்றி அமைந்துள்ள பகுதியில் இருந்து வெளியேறும் கழிவு நீர் பாலாஜி அவென்யூ கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் மூலம் சுத்திகரிக்கப்பட்டு, செம்பாக்கம் ஏரியில் வெளியேற்றப்படுவதாகவும், கூடுதல் திறன் கொண்ட சுத்திகரிப்பு நிலையம் அமைக்க

தொழில் நுட்ப வல்லுநர்களின் ஆலோசனை கோரப்பட்டுள்ளதாகவும், மேற்படி ஆலோசனை பெறப்பட்டு அதன்படி சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தாம்பரம் நகராட்சி பகுதியில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர், சிட்லபாக்கம் ஏரியில் கலப்பதை தடுத்து நிறுத்த சிட்லபாக்கம் பேரூராட்சி கடித ந.க.எண்.463/2011/அ.1/நாள்.03.12.2018ன்படி எழுதப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

சிட்லபாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு, தாம்பரம் நகராட்சியலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் மேற்படி செம்பாக்கம் ஏரியில் கலப்பதை தடுத்து நிறுத்த உடனடி நடவடிக்கைகள் மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு தாம்பரம் நகராட்சி ஆணையர், மற்றும் சிட்லபாக்கம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களுக்கு வலியுறுத்தி ஆணையிடப்படுவதுடன், சிட்லபாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரின் 19.12.2018 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு சிட்லபாக்கம் பேரூராட்சிக்குட்பட்ட நரசிம்ம பல்லவன் தெரு, சிட்லபாக்கம் பேரூராட்சி 1 மற்றும் 2–வது பிரதான சாலைகளில் பொதுமக்கள் மற்றும் வணிக நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வருவாய் மற்றும் நெடுஞ்சாலைத்துறையினருடன் ஒருங்கிணைந்து நடவடிக்கை மேற்கொண்டு, ஆக்கிரமிப்புகளை அகற்றி அதற்கான அறிக்கையினை ஒரு மாத காலத்திற்குள் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கவும் சிட்லபாக்கம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 21 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

பெறுநர்.

1.திரு [illegible] ஜெயராம்,
எண். 7, 2வது பிரதான சாலை,
எஸ்.பி.ஐ. காலனி,
சிட்லபாக்கம்,
சென்னை–64.

2.நகராட்சி ஆணையர்,
தாம்பரம் நகராட்சி,
சென்னை

3.செயல் அலுவலர்,
சிட்லபாக்கம் பேரூராட்சி,
சென்னை–64

4.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
காஞ்சிபுரம் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம்.